**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 2, Special Issue - 3, October 2023** **E-ISSN: 2583-0481**

# The Food and Occupation of the Neithal Thinai People

**Dr. N. S. K. Sangeethratha,** Assistant Professor of Tamil, Thiagarajar College, Madurai, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-0297-3100**
**DOI: 10.5281/zenodo.8397624**

## Abstract

*Sangam literature is a valuable treasure of the Tamil Society. They are classics that proclaim Tamil literature's superior quality to the world. The Sangam period is hailed as the Golden Age in history. The people of the Sanga period divided their lives into Aagam and Puram. They praised the morals and love of the leader as Agam and the Puram morals such as the education, valour, and gifts as Puram. Also, they defined the Thinai discipline. Accordingly, Kurinji, Mullai, Marutham, Neithal and Palai landscapes were formed. In this way, Thinai business systems were also formed. Harvesting of honey, digging tubers, paddy in Kurinchi thinai and ploughing in Mullaithinai for grazing goats and cows and hunting, Agriculture, paddy cultivation in Marutha Thinai and fishing, salt production, pearl cutting in the Neithal Thinai and minor agriculture and robbing in the Palai thinai were developed as professions. The people belonging to the thinais also specialized in their businesses and lived by increasing food production. Thus, this article expands the research on the food and occupation of the people of the Neithal Thinai.*

**Keywords:** Food, Occupation, Neythal Thinai, Tamil People.

## References

[1] Mohan, Ira. *Panmuga Nokil Kurunthogai*. Vanathi Publication, T. Nagar, Chennai – 600 017, 2017.
[2] Muthamilselvan, S. "*Neythal Thinai Makkalin Porul Sarntha Valviyal." Muthukamalam* E-Journal, ISSN:2454-1990
[3] Narayanavelu Pillai. *Pathuppattu*. Mullai Publication, Manadi, Chennai – 600 001, 2003.
[4] Ramasubramaniam, V, D. *Akananooru*. Thirumagal Publication, Chennai – 600 017, 2013.
[5] Ramasubramaniam, V, D. *Natrinai*. Thirumagal Publication, Chennai – 600 017, 2009.
[6] Ramanathan, L, P. *Sangakalath Thamilar Valvuu*. Velliyan Publication, Ramanathapuram, 1958.
[7] Sambasivanaar, S. *Tamil Illakiyathil Neithal Thinai*, Amutham Publication, Madurai – 625016.
[8] Thirumalai, M. *Sirupaanarruppadai*. Meenakshi Publication, Madurai - 625 001, 2007.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 2, சிறப்பிதழ் - 3, புரட்டாசி 2054 இ - ஐஎஸ்எஸ்எண்: 2583-0481

# நெய்தல் நில மக்களின் உணவும் தொழிலும்

**முனைவர் ந. செ. கி. சங்கீத்ராதா**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தியாகராசர் கல்லூரி, மதுரை, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-0297-3100
DOI: 10.5281/zenodo.8397624

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க இலக்கியங்கள் தமிழ்ச் சமுதாயத்தின் விழுமியங்கள். தமிழினத்தை தரணிக்குப் பறைசாற்றும் செம்மாந்த காவியங்கள். சங்க காலம் வரலாற்றில் பொற்காலம் என்று போற்றப்படுகின்றது.அத்தகைய சங்ககால மக்களின் வாழ்வினை அகம், புறம் என்று வகுத்துக்காட்டினர்.ஒத்த அன்புடைய தலைவன் தலைவிக்குள் நிகழும் ஒழுக்கத்தை அகம் என்றும், புற ஒழுக்கங்களான அரசனது கல்வி, வீரம், கொடை இவற்றை புறம் என்றும் போற்றப்பட்டன. மேலும், திணை சார்ந்த ஒழுக்கத்தினையும், திணை சார்ந்த முதல், கரு, உரிப்பொருள்களையும் வரையறுத்திருந்தனர். அதன்படி குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலைத் திணைகள் உருவாயின. குறிஞ்சித்திணையில் தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல், திணைப்புனம் காத்தல் என்றும் முல்லைத்திணையில் ஆடு, மாடுகளை மேய்த்தல், வேட்டையாடுதல் என்றும் மருதத்திணையில் உழவு, வேளாண்மை, நெல்பயிரிடுதல் என்றும், நெய்தல்திணையில் மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல், முத்து எடுத்தல் என்றும் பாலைத்திணையில் வழிப்பறிசெய்தல் என்று திணைசார்ந்த தொழில்முறைகளும் உருவாயின. அத்திணைக்குரிய மக்களும் அவர்களுக்குரிய தொழிலினைச் சிறப்புடன் செய்து உணவு உற்பத்தியினைப் பெருக்கி வாழ்ந்தனர்.அவ்வகையில் நெய்தல் திணை மக்களின் தொழில் மற்றும் உணவுப்பண்பாடு குறித்த ஆய்வினை இக்கட்டுரை விரித்துச் செல்கின்றது.*

**திறவுச்சொற்கள்:** உணவு, தொழில், நெய்தல் திணை, தமிழ் மக்கள்.

**முன்னுரை**

சங்க கால மக்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்றழைக்கப்படும் ஐந்திணைகளைத் தங்களது வாழ்விடங்களாகக் கொண்டிருந்தனர்.ஒவ்வொரு திணைக்கும் முதல், கரு, உரிப்பொருள்கள் வரையறை செய்யப்பட்டன.முதல் என்பது நிலத்தையும் பொழுதையும் குறிப்பன.கரு என்பது தொழில், தெய்வம் பறவைகள், விலங்குகள் போன்றவற்றைக் குறிப்பன. உரிப்பொருள் என்பது அத்திணைக்குரிய ஒழுக்கத்தைக் குறிக்கும்.சங்க இலக்கியம் காட்டும் ஐந்திணைகளில் ஒன்று நெய்தல் திணை. கடலும் கடல் சார்ந்த பகுதியும் நெய்தல் எனப்படும். நெய்தலுக்குரிய உரிப்பொருள் இரத்தலும் இரத்தல் நிமித்தமும் ஆகும்.நெய்தல் நிலத்தில் வாழும் மக்கள் பரதவர்கள் என்றழைக்கப்பட்டனர். மற்றைய திணைகளைவிட நெய்தல்திணையில்தான் மக்களிடையே துன்பமும் வருத்தமும்

மிகுதியாகத் தென்பட்டது. அத்தகைய நெய்தல் திணை மக்களின் தொழில் மற்றும் உணவு குறித்து ஆய்ந்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**மீன் பிடித்தல்**

சங்க இலக்கியம் காட்டும் ஐந்திணைகளில் ஒன்று நெய்தல் திணை. கடலும் கடல் சார்ந்த பகுதியும் நெய்தல் எனப்படும். "நெய்தல் – ஒரு தாவத்தின் பெயர். மிகுதியான நீர் நிலைகள் கொண்ட இடத்தில் வளரும் தன்மை பெற்ற தாவரமாகும்.இதன் மலர் நீலமணி போன்ற நிறமும் நீரின் அளவிற்கேற்ப வளரும் தன்மையும் கொண்டது. இதன் சிறப்பின் அடிப்படையில் நெய்தல்திணை எனப் பெயரிட்டுள்ளனர் பண்டைத் தமிழர்." (சோ. முத்தமிழ்ச்செல்வன், 111). நெய்தலுக்குரிய உரிப்பொருள் இரத்தலும் இரத்தல் நிமித்தமும் ஆகும். நெய்தல் நிலத்தில் வாழும் மக்கள் பரதவர்கள் என்றழைக்கப்பட்டனர். கடற்கரை யோரங்களில் குடில்கள் அமைத்து வாழ்ந்தனர். சிறு குடிவாழ்க்கையை மேற் கொண்டிருந்தாலும் பெருங்குடியாய் உயர்வான பண்புகளைக் கொண்டவர்கள். கடலே பரதவர்களின் வாழ்வாதாரக் களமாகும். அவர்களின் முதன்மையான தொழில் மீன் பிடித்தல் மற்றும் உப்பு விளைத்தலாகும். பரதவர்கள் மீன் பிடிக்கச் செல்லும் நிலையை "வேட்டம்" என்று குறிப்பிடுவர்.

**வேட்டம் பொய்யாது வலைவளம் சிறப்பப்**
**பாட்டம் பொய்யாது பரதவர் பகர (நற்., பா. 38: 1-2)**

என்று நற்றிணையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.மீன் பிடிக்கச் செல்லப் பயன்படும் மரக்கலங்களை அவர்களே உருவாக்குவார்கள். மிகவும் வலுவுடையதாகவும் உறுதிப்பாடுமிக்கதாகவும் எத்தகைய கடல்சீற்றத்தையும் எதிர்கொள்ளும் வகையிலும் மரக்கலத்தினை உருவாக்குவார்கள். மீன் பிடிப்பதற்கேற்ற வலையையும் அவர்களே பிண்ணிக்கொள்வார்கள்.எத்தகைய சுறா மீன்கள், திமிங்கலம் போன்றவற்றையும் பிடிப்பதற்கேற்றாற்போல வலிமையான வலைகளை உருவாக்குவார்கள்.அவ்வலைகள் சிறு சிறு கண்களாக காண்பதற்கு அழகாக இருக்கும் அதனைப் படகில் ஏற்றிக்கொண்டு மீன் பிடிக்கச் செல்வர்.பரதவர்களின் மீன்பிடி வலை போன்றே நெய்தல் நில மகளிரின் கண்வலையும் உள்ளது என்கிறார் ஒரு புலவர். குறுந்தொகைப் பாடல் ஒன்றில்,

**ஆண்டுஒழிந் தன்றே மாண்தகை நெஞ்சம்…**
**…நுண்வலைப் பரதவர் மடமகள்**
**கண்வலைப் படூஉம் கான லானே (குறுந்., பா. 184: 4 -7)**

என்பதில், "நுண்வலை" என்பது நுண்ணிய நூலினாலான பரதவரது வலையைக் குறிப்பிடுகின்றது. "வலையை யுடையார் மகள்", "பரதவர் விரிக்கும் நுண்ணிய வலையில் சிறுமீன் அகப்பட்டுவிடும் அதுபோல், அவர்தம் இளம்பெண் விரிக்கும் கண் ஆகிய வலையில் காதலனின் நெஞ்சம் என்ற மீனும் அகப்பட்டு விடும். எனவே, அவ்வழி போயிருப்பின் என்னை

இடித்துக் கூறமாட்டாய் என்று பாங்கனை மறுத்துத் தலைவன் பேசியதாக இப்பாடல் திகழ்கின்றது.'' (பேரா. சோ. ந. கந்தசாமி, ப.55)

மீன்பிடித்தல் தொழில் மற்றைய தொழில்போன்று அன்று. சிலசமயம் வலையில் எந்த மீனும் சிக்காது. ஒருசில சமயம் சுறா மீன்கள் ஒன்று சேர்ந்து வலையைக் கிழித்துவிடும். அச்சமயங்களில் பரதவர்கள் கையில் பொருள் இன்றியே கரைக்குத் திரும்புவர். சில சமயங்களில் கடலில் ஏற்படும் சீற்றத்தால் உயிருக்குஆபத்து நேரிடலாம். ஆனால் அதனையெல்லாம் பொருட்படுத்தாது தாங்கள் செய்யும் தொழிலிலே மிகக் கவனத்துடன் இருப்பர். சிலசமயங்களில் கடும் புயலாலும் மழையாலும் கடலில் செல்லும் படகுகள் திசைமாறி பாறைகளில் மோதி உடைந்தும், சுறாமீன்களால் வலைகள் கிழிக்கப்பட்டும் பரதவர்கள் துயரத்திற்கு ஆளாவர்கள். ஆனால் இத்துயரத்தினை நினைத்துக்கொண்டு அத்தொழிலினை விட்டுவிட மாட்டார்கள்.காலச்சூழல், வானிலை இவற்றினை ஆய்ந்தறிந்து மீண்டும் உடைந்த படகினை செப்பனிட்டுக்கொண்டும் கிழிந்த வலையினைப் பிண்ணிக்கொண்டும் கடலுக்குள் செல்வர். படகுகளை முன்பைவிட வலுவாகவும் விரைந்து செல்லும் ஆற்றல் உடையதாகவும் உருவாக்கிக்கொள்வர். இதனை,

**சிறுகுடிப் பரதவர் பெருங்கடன் மடுத்த**
**கடுஞ்செலற் கொடுந்திமில் (அகம்., பா. 330: 16-17)**
**கூர்வளிக் கடுவிசை மண்டலிற் பாய்ந்துடன்**
**கோட்சுறாக் கிழித்த கொடுமுடி நெடுவலை (அகம்., பா. 340: 20-21)**

என்று பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மீன் பிடிக்கப் பயன்படும் வலைகள் வலுவுடைதாகப் பிண்ணப்பட்டு படகில் ஏற்றிச் செல்வீர். இடிபோல முழங்கும் கடலில் மீன் வலைகளை விரித்து வீசுவர். அது எப்படி எனில், யானைப் பாகன் பிணித்துச் செலுத்துகின்ற அடக்குதற்கு அரிய யானைகளைப் போலப் பரதவர்கள் செலுத்துவார்கள்.

**வழக்கதிர் திரித்த வன்ஞாண் பெருவலை**
**இடிக்குல் புணிப் பௌவத் திருமார்**
**நிறையப் பெய்த அம்பி காழோர்**
**சிறையருங் களிற்றிற் பரதவர் ஒய்யும் (நற்., பா. 74: 1-4)**

என்று, பரதவர்கள் கடலில் மீன் பிடிப்பதற்கு வலை வீசும் செயலை யானைப்பாகன் தனது கோலால் யானையை அடக்குவதற்கு ஒப்பிட்டுக் காட்டுகின்றது இந்த நற்றிணைப் பாடல்.

**எறிஉளி**

“எறிஉளி” என்பது பரதவர்கள் மீன்களை எறிந்து கொல்வதற்கென பயன்படுத்தும் கருவி. மிகக் கூர்மையானதொரு ஆயுதம்.காண்பதற்கு ஈட்டி போல் தென்படும்.பரதவர்கள் படகில் செல்லும்போது நீரில் பெரிய மீன்களைக் கண்டால் உடனே இந்த எறி உளியை கொண்டு எறிவர். எறிஉளி பட்ட மீன் துடித்து நீரில் மிக உயரமாய் தாவிச்செல்லும். எறிஉளி

பட்ட மீனின் உடலிருந்து கொட்டிய இரத்தம் கடல் நீரின் நிறத்தையே மாற்றிவிடும். அடிபட்ட மீன் நீரில் சுழன்று, சுழன்று தத்தளித்துப் பின் கரை ஒதுங்கும். இதனை,

**குறியிறைக் குரம்பைக் கொலைவெம் பரதவர்**
**எறியுளி பொருத ஏமுறு பெருமீன்**
**புண்ணுமிழ் குருதி புலவுக்கடல் மறுப்பட**
**விசும்பணி வில்லிற் போகிப் பசும்பிசிர்த்**
**திரைபயில் அழுவம் உழக்கி உரனழிந்து**
**நிரைதிமில் மருங்கில் படர்தரும் (அகம்., பா. 210: 1-6)**

என்று அகநானூறு குறிப்பிடுகின்றது. பரதவர்களின் கையிலுள்ள எறிஉளியைக் “கோல்“ எனக் கருதுகிறார் ஒரு புலவர். மேலும், அவர்களை உயர்வுபடுத்தும் நோக்கில், மன்னனிடத்தில் மட்டுமே கோல் உண்டு எனக் கருத வேண்டாம். மீன் பிடிக்கும் பரதவரிடமும் அக்கோல் உண்டு. அதுவும் செங்கோல் என்கிறார்.

**பெருங்கடற் பரப்பில் சேயிறால் நடுங்கக்**
**கொடுந்தொழில் முகந்த செங்கோல் (அகம்., பா, 60: 1-2)**

என்று பரதவர்களின் கையிலுள்ள கோல் உயர்விக்கப்படுகின்றது.

**உணவுப் பங்கீடு**

நெய்தல் நில மக்கள் தங்களுக்கென்று சில வாழ்வியல் நெறிமுறைகளைப் பின்பற்றினர். அதில் ஒன்றுதான் வேட்டையாடி கொண்டு வந்த மீன்களை தங்களது உறவுகளுக்குப் பகிர்ந்து அளித்தல். வலைகளில் மாட்டிய மீன்களைக் கொண்டு வந்து கரையில் சேர்த்தப் பின்னர் மகிழ்ச்சிப் பெருக்கால் ஆடிப்பாடி மகிழ்வர். கொண்டுவந்த மீன்களை கரைகளில் உலரவைத்து, அச்சமயம் கையில் கலன்களுடன் வந்து இரந்து நிற்பவர்களுக்கு இல்லை என்று கூறாது அள்ளித் தருவார்கள் (கலன்கள் நிறைய மட்டும்) அது எதைப்போல உள்ளது எனில், வயலிருந்து நெல்லை அறுவடைசெய்து களத்தில் குவித்து வைத்திருக்கும் உழவர்கள் தன்னிடம் வந்து இரப்போருக்கு கலன் நிறைய நெல் அளிப்பது போல் இருந்தது என்கிறார் புலவர். மீதமுள்ள மீன்களை கூறிட்டு விற்று விலை கொள்வர்.வறியோர்க்கு வழங்கியதன் நிறைவோடு கடற்கரை மணலில் கண்ணயர்ந்து உறங்குவார்கள் என்கிறார் புலவர். இதனை,

**…பெருங்களந் தொகுத்த உழவர் போல**
**இரந்தோர் வறுங்கலம் மல்க வீசிப்**
**பாடுபல அமைத்துக் கொள்ளை சாற்றிக்**
**கோடுயர் திணிமணல் துஞ்சும் (அகம்., பா. 30: 1-11)**

என்கிறது.

**காலம் கருதாது தொழில் புரிவோர்**

பரதவர்கள்இரவு நேரத்திலும் மீன்பிடிக்கச்செல்வர்.அலைகள் ஓய்ந்திருக்கும் அச்சமயத்தில் மீனகளைப் பிடிப்பது எளிதாக இருக்கும். ஒளி பொருந்திய விளக்குகளைக்

கொளுத்திக்கொண்டு, இரவில் நடுயாமத்திலுங்கூட வேட்டையாடுவர்..அதிகாலை கரை வந்து சேர்வர்.கரையில் இருக்கும் புன்னை மர நிழலில் தங்கியிருந்து மீண்டும் கடலுக்குச் செல்லும் விருப்பத்தில் தக்க சமயத்தை எதிர்நோக்கி காத்திருப்பர். தாங்கள் பிடித்த மீன்களை அறுத்து வெயிலில் மணற்பரப்பில் உலத்துவர்.அதனை உண்ணவரும் கடற்காகங்களை விரட்டி அடிப்பர்.கடற்கரையில் காணப்படும் கிளிஞ்சல்களில் மீன் கொழுப்பினை நெய்யாக இட்டு விளக்கினை ஏற்றிச் செல்வர்.

**உப்பு விளைத்தல்**

நெய்தல நில மக்களின் மற்றொரு தொழில் உப்பு விளைவித்தலாகும்.கடல்நீரை உப்பு பாத்திகளில் பாய்ச்சி உப்பை விளைவிப்பர். மழைக்காலத்தில் நெல் பயிரிட்டும் விளைவிப்பர். எக்காலத்திலும் உணவுக்குப் பஞ்சமில்லாத மக்கள் வாழ்ந்தார்கள் எனில், அது நெய்தல் திணை மக்களேயாவர். மழைக்காலத்தில் நெல் பயிரிட்டும், மற்ற காலத்தில் உப்பு விளைவித்தும் எச்சமயங்களிலும் மீன்பிடித்தும் வாழ்க்கையை வளமாக்கிக் கொண்டனர்.இவ்வாறு விளைவிக்கப்பட்ட உப்பினை ஒரு பெரிய குன்று போல் கொட்டி வைத்திருப்பர்.பின்னர் இவ்வுப்பினை விற்பதற்காக வண்டிகளில் ஏற்றிக்கொண்டு செல்வர். வண்டிகளை எருதுகள் இழுத்துச் செல்லும். எருதுகளை விரட்டுவதற்காக கைகளில் கோல் வைத்திருப்பர்.மகளிரும் உப்பை விற்கச் செல்வர். அப்பெண்களுக்கு ‘‘உமணப் பெண்டிர்’’ என்று அழைக்கப்பட்டனர். உமணப்பெண்கள் கைகளில் வளையொலிப்பச் செல்வர்.உப்பைக் கூவி அழைத்து அருகிலுள்ள ஊர்களில் சென்று விற்பார்கள். இதனை,

**கதழ்கோல் உமணர் காதல் மடமகள்**
**சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி**
**நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச்**
**சேரி விலைமாறு கூறலின் மனைய**
**விளியறி ஞமலி குரைப்ப வெரீஇய (அகம்., பா. 140: 5-9)**

என்று அகநானூறு குறிப்பிடுகின்றது.நெய்தல் நில மக்கள் உப்பினை விற்று அதற்கு விலையாக நெல்லினைக் கொள்வர். இந்தப் பண்டமாற்று முறை எல்லா நிலங்களிலும் இருந்துள்ளது.மருத நிலத்து மக்களும் தம்மிடமுள்ள நெல்லினைக் கொடுத்துவிட்டு உப்பினைப் பெற்றுச்செல்வர் என்பதை நற்றிணைக் குறிப்பிடுகின்றது.

**தம்நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து**
**பிறநாட்டு உப்பின் கொள்ளை சாற்றி (நற்., பா. 183: 1-2)**

எனப் பதிவு செய்கின்றது. எனவே, நெய்தல் நிலத்திலுள்ள உமணப் பெண்கள் உப்பை விற்றுப் பெற்றுக் கொண்டு வந்த நெல்லினை குத்திப் புடைத்து, வெண்சோறு ஆக்குவர். அச்சோற்றில் அயிலை மீனைஇட்டு புளிக்கறியினைக் கூட்டாக வைத்து, பெரிய கொழுத்த மீன் கருவாட்டையும் சேர்த்து உண்பார்கள் என்பதனை,

**உப்புறொடை நெல்லின் மூரல் வெண்சோறு**

**அயிலை துழந்த அம்புளிச் சொரிந்து**

**கொழுமீன் தடியொடு குறுமகள் கொடுக்கும் (அகம்., பா, 60: 4-6)**

எனக் குறிப்பிடுகிறது. மேலும், நெய்தல் நிலத்து மீன் குறிஞ்சிக்கும் குறிஞ்சி நிலத்து தேனும் கிழங்கும் நெய்தல் நிலத்துக்கு பண்டமாற்றம் செய்யப்பட்ட செய்தியும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதோடு குறிஞ்சிக்கும் நெய்தலுக்கும் பண்பாட்டு பரிமாற்றமும் நிகழ்ந்துள்ளது. குறிஞ்சிப்பண்ணை பரதவர் பாடவும், நெய்தல் நில மலரினை குறிஞ்சிக் குறவர் சூடவும் செய்தனர் என்று பொருநராற்றுப்படை குறிப்பிடுகிறது. இதனை,

**தேன் நெய்யோடு கிழங்கு மாறியோர்**

**மீன் நெய்யோடு நறவு மறுகவும்…**

**../குறிஞ்சி பரதவர் பாட நெய்தல்**

**நறும்புங் கண்ணி குறவர் சூட (பட்., பா. 60: 6-5)**

**மீன் விற்றல்**

நெய்தல் நில மக்களின் வாழ்வில் ஆண்களைப் போலவே பெண்களும் கடுமையான உழைப்பாளிகளாக இருந்தனர். தந்தைமார்கள் கொண்டு வந்த மீன்களை இப்பெண்கள் கடற்கரை மணலில் இட்டு உலர்த்தி கலன்களில் இட்டு பக்குவப்படுத்துவர். பின்னர் விழாக்கள் நடைபெறும் இடங்கள், மக்கள் கூட்டமாக இருக்கும் இடங்கள், அருகிலுள்ள ஊர்களுக்குச் சென்று விலை கூறி விற்பர். மேலும், தமது தந்தைகளுடன் பல குன்றுகளைக் கடந்து நெடுந்தூரம் பயணம் செய்து, உப்பை விற்று நெல்லைப் பெற்று வரும் வீர மகளிர் ஆவர்.

**தழையணி யல்குற் செல்வத் தங்கையர்**

**விழவயர் மறுகின் விலையெனப் பகரும் (அகம்., பா. 320: 3-4)**

**விருந்து பேணல்**

விருந்தோம்பல் என்பது தமிழர்களின் தலையாய பண்பு! நெய்தல் நில மக்களும் அதற்கு விதிவிலக்கல்ல. இல்லறத்திற்கு விருந்து வருவதையும் அவர்களைப் பேணுதலையும் விரும்பி மகளிர் காத்திருப்பர். விருந்தினருக்கு விரைந்து உணவு சமைக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற ஆடவர்களை எதிர்நோக்கி கடலில் படகு தென்படுகிறதா என்றும் வெளிச்சம் எங்கும் தெரிகிறதா என்றும் ஆவலுடன் கடலை நோக்கிய வண்ணம் கடற்கரையில் காத்திருப்பர். மேலும், கடலின் பெரியஅலையோசைக் கேட்டு நடுக்கம் கொண்டு, கடலுக்குச் சென்ற கணவன் இன்னும் கரை வந்து சேரவில்லை என்ற வருத்தமும், வந்த விருந்தினருக்கு உணவு சமைத்துப் பரிமாறவில்லையே என்ற கவலையும் கொண்டு துயரத்துடன் கரையில் பரதவகுலப் பெண்கள் காத்திருப்பர். இதனை,

**யார் அணங்கு உற்றனை கடலே? புழியர்…**

**…வெள்வீதி தாழை திரைஅலை**

**நள்ளென் கங்குலும் கேட்கும் நின் குரலே (குறுந்., பா. 163: 1-5)**

என்ற குறுந்தொகைப் பாடலில், தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவி கடலினை நோக்கி, நீ நள்ளிரவிலும் ஒலிக்கின்றாயே, யாரால் வருத்தம் உற்றாய்? என இரங்கிக் கேட்கிறாள்.'' நான் ஒரு தலைவனால் வருத்தமுற்றது போல் நீயும் ஒரு தலைவனால் வருத்தமுற்றாய் போலும்?யார் அந்த தலைவன் என்கிறாள். கடலின் நள்ளிரவு ஒலியினைத் தலைவி கேட்கின்றாள் என்றால், தலைவியும் நள்ளிரவாகியும் உறங்கவில்லை என்றுதான் பொருள். மற்றைய திணைப் பெண்களைவிட நெய்தல் நிலப் பெண்களே தலைவனைப் பிரிந்து பெரும் துயர் அடைகின்றனர்'' (மு.வரதராசன் ப.70)என்று நெய்தல் நில மகளிரின் துயர நிலையினைப் பதிவுசெய்கிறார் பேரா. மு.வ. அவர்கள்.

**இதே கருத்தினைக் கொண்ட புதுக்கவிதை,**

**கடலுக்குப் போன தலைவன்**
**இன்னும் வீடு திரும்பவில்லை**
**கரைமீனாகத் தவிக்கும்**
**தலைவியின் இதயத்தில் வெடிக்கிறது**
**நிமிடத்துக்கு 72 துப்பாக்கிக் குண்டுகள்!** (அ. நிலாதரன், ஆனந்த விகடன்)

என்று கடலை எதிர்நோக்கி காத்திருக்கும் நெய்தல் நிலத் தலைவியின் நிலையினை வெளிப்படுத்துகின்றது.''இலக்கியத்திற்கு வேறு எத்தன்மை இருப்பினும் போதாது.உணர்த்தும் ஆற்றல் இருத்தல் இன்றியமையாதது.உணர்த்துதல் இல்லையெனில் அது இலக்கியம் ஆகாது'' (மு.வரதராசன், இலக்கியத்திறன், ப. 246) என்று கூறும் பேராசிரியர் மு.வ.அவர்களின் கருத்து இங்கு நினைவு கூரத்தக்கது.

நெய்தல்நிலப் பெண்கள் விருந்தினருக்கு கொக்கின் நகம் போன்ற கூர்மையாக வடிவுடைய சோற்றை வடித்து விருந்தினர்களுக்கு அளித்து உபசரிப்பார்கள்.அச்சோற்றை கடல் தெய்வத்திற்கு நிவேதித்து காக்கைக்கும் படைப்பர்.

**திருவுடை வியனகர் வருவிருந்து அயல்மார்**
**பொற்றொடி மகளிர் புறங்கடை உகுத்த**
**கொக்குகிர் நிமிரல் மாந்தி ஏற்பட (நற்., பா, 258: 4-6)**

இத்தகைய அன்புடைய பெண்கள் வாழும் ஊர் என்று நற்றிணை பதிவு செய்கின்றது.

**முத்து எடுத்தல்**

பரதவர்கள் மீன்பிடித்தல், உப்பு விளைவித்தலோடு மட்டுமன்றி சங்கினையும் மூழ்கி எடுப்பர்.கடலினுள் மூழ்கி சங்கு எடுத்தல் அவ்வளவு எளிதன்று.உயிரினைப் பணயம் வைத்து அச்செயலைச் செய்வர் தம்மை நோக்கி பாய்ந்து வரும் சுறா மீன்களையும் விலக்கித் தள்ளிவிட்டு வலம்புரி முத்துக்களை மூழ்கி எடுப்பர். பின்னர், கடற்கரையில் தங்களது வரவை எதிர்நோக்கி காத்திருக்கும் உறவினர்களுக்கு அதனைப் பகிர்ந்து அளித்து, மீதமுள்ள முத்துக்களை விற்றுத் தகுந்த பொருளினைப் பெற்றுக் கொள்வர்.

**இலங்கிடும் பரப்பின் எறிசுறா நீக்கி**

**வலம்புரி மூழ்கிய வான்றிமிற் பரதவர் (அகம்., பா. 350: 10-11 )**

**பெருங்கடல் வெண்சங்கு காரணமாப் பேணா**

**திருங்கடன் மூழ்குவார் (திணை., நூற். 33)**

என்று சங்க இலக்கியங்களில்முத்து எடுத்தல் குறித்த செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மகளிர்**

பரதவர் குலத்துப் பெண்கள் பரத்தியர் என்றழைக்கப்படுவர். இப்பெண்கள் ஆடவர் கொண்டுவரும் மீன்களை உப்பிட்டு கடல் மணலில் உலர்த்துவர். அப்போது அதைக் கொத்தித் தின்னவரும் கடற்காகங்களை தாழைமலர்களைக் கொண்டு விரட்டுவர். என்பதனை,

**கணங்கொள் வண்டார்த்து உலாங்கன்னி**

**நறிஞாழல் கையிலேந்தி**

**மணங்கமழ் நங்காணல் (நற்., பா. 331: 5-8)**

எனக் குறிப்பிடப்படுகின்றது. உப்பை விளைவித்து, உப்பங்கழியில் குன்று போல் வைத்திருப்பர். மேலும், மகளிர் உப்பங்குன்றில் ஏறிநின்று கடலிருந்து கடற்கரைக்கு வரும் படகுகளைப் பார்த்து இது எனது தந்தையின் படகாகும்.அது உனது தந்தையின் படகாகும் எனப் பேசி மகிழ்வர். இதனை,

**மடநோக்கு ஆயமொடு உடனுப்பு ஏறி**

**எந்தை திமிலிது நுந்தை திமிலென**

**வளைநீர் வேட்டம் போகில கிளைஞர்**

**திண் திமில் எண்ணும் (நற்., பா. 331: 5-8)**

என்று நற்றிணைக் குறிப்பிடுகின்றது. பரதவர்களின் ஊரில் உள்ள தெருக்களில் நிலவு ஒளிர்ந்து கொண்டிருக்கும். தெருக்களில் புலால் நாற்றம் வீசிக்கொண்டிருக்கும். குடிசைகள் புல்லாலும், பனைமடல் முதலியவற்றாலும் வேயப்பட்டிருக்கும்.அங்கு ஒருநாள் தங்கியிருப்பவர் கூட அம்மக்களின் அன்பினால் தங்களது சொந்த ஊரையே மறந்திடுவர்.அத்தகைய அன்புள்ளம் கொண்டவர்கள் பரதவர்கள்.

**இன்னா உறையுட்டு ஆயினும் இன்பம்**

**ஒருநாள் உறைந்திசி னோர்க்கும் வழிநாள்**

**தம்பதி மறக்கும் பண்பின் எம்பதி (அகம்., பா. 200 4-6)**

என்று அகநானூறு பதிவு செய்கின்றது.

**நிறைவுரை**

நெய்தல் நில மக்கள் தங்களது கடல்சார்ந்த வாழ்க்கையினும் கடமை நெறி தவறாதவர்களாக இருந்தனர் என்று அறியலாகிறது. “தம்மிலிருந்து தமது பாத்துண்டல்” என்பதற்கேற்ப தாங்கள் மிகுந்த சிரமத்திற்கிடையே பிடித்துவரும் மீன்களை தமது உறவுகளுக்கு அளித்து மகிழ்வர். சிறுகுடி என்றாலும் பெருங்குடியாய் உயர்ந்தவர்கள் பரதவர்கள் எச்சூழலையும் உறுதியான மன வலிமையோடு எதிர்த்துப் போரிடும் ஆற்றல்

பெற்றவர்கள் என்றும் துயரம்வரினும் துவளாத துணிவுடையவர்கள் என்றும் உணர முடிகின்றது. நெய்தல் நிலப் பெண்களும் மனஉறுதி மிக்கவர்கள். உப்பு விளைவித்தலோடு அல்லாமல் அதனை அவர்களே கொண்டு சென்று விற்கவும் செய்தள்ளனர். வழியிலுள்ள பெருங்குன்றுகளைக் கடந்து நெடும் பயணம்செய்துள்ளனர் என்திலிருந்து மற்றைய திணைப் பெண்களை விட நெய்தல் நில மகளிர் உடலுழைப்பு மிக்கவர்களாகவும் அறியப்படுகின்றது. அதேசமயம் விருந்தோம்பல் பண்பு உடையவர்களாகவும் உள்ளனர். மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல், முத்து எடுத்தல் போன்ற தொழில்களில் ஏற்படும் எத்தகைய சிரமங்களையும் எதிர்நோக்கும் வல்லமையுடையவர்களாக நெய்தல் நிலமக்கள் வாழ்ந்திருந்தனர் என்பதை இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகின்றது.

**துணை செய்த நூல்கள்**

[1] இராமசுப்பிரமணியம், வ.த. *அகநானூறு.* திருமகள் நிலையம், சென்னை - 600 017, 2013.

[2] இராமசுப்பிரமணியம், வ.த. நற்றிணை. திருமகள் நிலையம், சென்னை - 600 017, 2009.

[3] இராமநாதன், லெ. ப. *சங்ககாலத்தமிழர் வாழ்வு.* வெய்ளையன் பதிப்புக் கழகம், இராமநாதபுரம், 1958.

[4] சாம்பசிவனார், ச. *தமிழ் இலக்கியத்தில் நெய்தல் திணை.* அமுதம் அச்சகம், மதுரை – 16.

[5] திருமலை, ம. *சிறுபாணாற்றுப்படை தெளிவுரையும் விளக்கமும்.* மீனாட்சி புத்தக நிலையம், மதுரை – 625 001, 2007.

[6] நாராயணவேலுப்பிள்ளை. பத்துப்பாட்டு, முல்லை நிலையம், சென்னை – 600 001, 2003.

[7] முத்தமிழ்ச்செல்வன், சோ. "நெய்தல் திணைப் பாடல்களில் பொருள்சார் வாழ்வியல்." *முத்துக்கமலம்* இணைய இதழ், ISSN: 2454-1990.

[8] மோகன், இரா. *பன்முக நோக்கில் குறுந்தொகை.* வானதி பதிப்பகம், சென்னை – 17, 2017.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.